பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

12 11 2024 7 15

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று தாத்ரா நகர் ஹவேலி - டாமன் டையூ செல்கிறார்.

2. மொரீஷியசுடனான உறவை மேலும் வலுப்படுத்த இந்தியா விரும்புவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

3. இந்திய - ரஷ்ய அரசுகளுக்கு இடையிலான ஆணையக் கூட்டத்தில் வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கரும், ரஷ்ய துணைப் பிரதமர் திரு டெனிஸ் மந்துரோவும் இன்று பங்கேற்கின்றனர்.

4. பழங்குடியினர் மேம்பாட்டுக்கு மத்திய அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதாக பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு ஜுயல் ஓரம் கூறியுள்ளார்.

5. ஜப்பான் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இன்று தாத்ரா நகர் ஹவேலி - டாமன் டையூ செல்கிறார்.

டாமனில் உள்ள பறவைப் பண்ணையை இன்று அவர் பார்வையிடுகிறார்.

அதைத் தொடர்ந்து அங்கு அரசு பொறியியல் கல்லூரி மற்றும் தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனம் ஆகியவற்றில் நடைபெறும் நிகழ்ச்சிகளிலும் அவர் கலந்துகொள்ள உள்ளார்.

நாளை சில்வாசாவில் உள்ள நமோ மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திற்கு செல்லும் அவர், அங்கு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுடன் கலந்துரையாட உள்ளார்.

அதனைத் தொடர்ந்து **Zandachowk** பள்ளியை அவர் திறந்து வைக்கிறார்.

பின்னர் சில்வாசாவில் நடைபெறும் பொது நிகழ்ச்சியிலும் திருமதி திரௌபதி முர்மு பங்கேற்க உள்ளார்.

<<<<>>>>

மொரீஷியசுடனான உறவை மேலும் வலுப்படுத்த இந்தியா விரும்புவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

அந்நாட்டில் பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ள திரு. நவீன் ராம்குலாமிற்கு தொலைபேசி மூலம் அவர் வாழ்த்து தெரிவித்தார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள பதிவில், திரு ராம்குலாமின் வெற்றி வரலாற்றுச் சிறப்பு வாய்ந்தது என்று குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவுக்கும், மொரீஷியசுக்குமான நல்லுறவு தனித்துவமானது என்றும், இதை மேலும் வலுப்படுத்த விரும்புவதாகவும் அவர் கூறியுள்ளார்.

திரு. நவீன் ராம்குலாமுடன் இணைந்து பணியாற்ற தாம் ஆவலுடன் இருப்பதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

குடியரசுத்தலைவர் மாளிகையில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வழங்கிய விருந்து நிகழ்ச்சியில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றுள்ள திரு. சஞ்சீவ் கண்ணா நேற்று பங்கேற்றார்.

இதில் குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர், பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங், வெளியுறவு அமைச்சர் திர. ஜெய்சங்கர், ஓய்வுபெற்ற தலைமை நீதிபதி திரு. சந்திரசூட் மற்றும் நீதிபதிகள் பங்கேற்றனர்.

<<<<>>>>

குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப் தங்கர், பஞ்சாப் மாநிலம் லூதியானாவுக்கு இன்று செல்கிறார்.

பஞ்சாப் வேளாண் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் பருவநிலை மாற்றம் மற்றும் வேளாண் உற்பத்தி தொடர்பான சர்வதேச கருத்தரங்கை அவர் தொடங்கி வைக்க உள்ளார்.

அதனைத் தொடர்ந்து லூதியானாவில் பள்ளி ஒன்றில் நடைபெறும் நிகழ்ச்சியில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுடன் திரு. ஜக்தீப் தங்கர் கலந்துரையாடுகிறார்.

<<<<>>>>

உத்தராகண்ட் மாநிலத்தில் தீபங்களின் திருவிழாவான இகாஸ் விழா இன்று கொண்டாடப்படுகிறது.

இதையொட்டி புதுதில்லியில் மக்களவை உறுப்பினர் திரு. அனில் பலூனியின் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி நேற்று பங்கேற்றார்.

இந்த விழாவையொட்டி மக்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்த அவர், இது மகிழ்ச்சியையும், வளத்தையும் ஏற்படுத்தட்டும் என்று தெரிவித்தார்.

வளர்ச்சியுடன் பாரம்பரியத்திற்கும் மத்திய அரசு முக்கியத்தும் அளித்து வருவதாக திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<>>>>

இந்திய - ரஷ்ய அரசுகளுக்கு இடையிலான ஆணையக் கூட்டத்தில் வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கரும், ரஷ்ய துணைப் பிரதமர் திரு டெனிஸ் மந்துரோவும் இன்று பங்கேற்கின்றனர்.

புதுதில்லியில் நடைபெறும் இக்கூட்டத்தில் வர்த்தகம், பொருளாதாரம், அறிவியல், தொழில்நுட்பம், கலாச்சார ஒத்துழைப்பு போன்றவற்றுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து இக்கூட்டத்தில் விவாதங்கள் மேற்கொள்ளப்படும் என வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பழங்குடியினர் மேம்பாட்டுக்கு மத்திய அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருவதாக பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு ஜுயல் ஓரம் கூறியுள்ளார்.

வரும் 15ஆம் தேதி பீஹார் மாநிலம் **Jamui**-யில் நடைபெற உள்ள பழங்குடியினர் கௌரவ தின நிகழ்ச்சியில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்க உள்ளார்.

இதற்கான ஏற்பாடுகள் குறித்து திரு. ஜுயல் ஓரம் நேற்று ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், இந்த நிகழ்ச்சியின்போது பழங்குடியினர் மேம்பாட்டுக்கான பல்வேறு புதிய திட்டங்களை பிரதமர் தொடங்கி வைக்க உள்ளதாகத் தெரிவித்தார்.

பழங்குடியினரின் கல்வி, தொழில் மற்றும் சமூக மேம்பாட்டுக்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக அவர் கூறினார்.

பழங்குடியினர் நலனுக்காக தனி அமைச்சகத்தை ஏற்படுத்தியது அடல் பிகாரி வாஜ்பாய் தலைமையிலான பிஜேபி அரசுதான் என்று திரு. ஜுயல் ஓரம் குறிப்பிட்டார்.

<<<<>>>>

ஜார்கண்ட் மாநில சட்டப்பேரவைக்கு நாளை நடைபெற உள்ள முதற்கட்ட சட்டப்பேரவைத் தேர்தலுக்கான ஏற்பாடுகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

மொத்தமுள்ள 81 தொகுதிகளில் 43 தொகுதிகளுக்கு நாளை தேர்தல் நடைபெற உள்ளது.

இதற்கான பிரச்சாரம் நேற்று மாலையுடன் நிறைவடைந்தது.

தேர்தல் ஏற்பாடுகள் குறித்து ராஞ்சியில் பேசிய அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி திரு. ரவிக்குமார், ஒரு கோடியே 37 லட்சம் வாக்காளர்கள் இந்த தேர்தலில் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ளதாகக் கூறினார்.

முதற்கட்டத் தேர்தலுக்காக 15 ஆயிரத்து 344 வாக்குச்சாவடி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

தேர்தலை அமைதியாகவும், நியாயமாகவும் நடத்த 200 கம்பெனிகளைச் சேர்ந்த துணை ராணுவப் படையினர் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதகாவும் அவர் கூறினார்.

வாக்குப்பதிவு காலை 7 மணி முதல் மாலை 5 மணி வரை நடைபெறும் என்றும், குறிப்பிட்ட 950 வாக்குச்சாவடிகளில் மட்டும் மாலை 4 மணியுடன் வாக்குப்பதிவு நிறைவடையும் என்றும் அவர் தெரிவித்தார்.

தேர்தல் நடத்தை நெறிமுறைகள் அமல்படுத்தப்பட்டதில் இருந்து மாநிலம் முழுவதும் இதுவரை ஆவணங்களின்றி கொண்டு செல்லப்பட்ட 179 கோடி ரூபாய் மதிப்பிலான ரொக்கம் மற்றும் பரிசுப்பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டிருப்பதாக அவர் தெரிவித்தார்.

தேர்தல் விதிமீறல்கள் தொடர்பாக 54 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் திரு. ரவிக்குமார் கூறினார்.

<<<<>>>>

மகாராஷ்டிராவில் சட்டப்பேரவைத் தேர்தலுக்கான பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

அம்மாநிலத்தில் அனைத்து 288 தொகுதிகளுக்கும் ஒரேகட்டமாக வரும் 20ஆம் தேதி தேர்தல் நடைபெற உள்ளது.

இதனையொட்டி சோலாப்பூர், புனே உள்ளிட்ட இடங்களில் இன்று நடைபெறும் பிரச்சாரப் பொதுக்கூட்டங்களில் பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி பங்கேற்க உள்ளார்.

கட்சியின் தலைவர் திரு. ஜே.பி. நட்டா, மூத்த தலைவர் திரு. அமித் ஷா, உத்தரப்பிரதேச முதலமைச்சர் திரு. யோகி ஆதித்யநாத் உள்ளிட்டோரும் இன்று மகராஷ்டிராவில் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளனர்.

காங்கிரஸ், சிவசேனா, தேசியவாத காங்கிரஸ் கட்சியின் தலைவர்களும் பிரச்சாரத்தை தீவிரப்படுத்தியுள்ளனர்.

<<<<>>>>

உயர்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வி தொடர்பான 2 நாள் தேசிய பயிலரங்கை புதுதில்லியில் மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் இன்று தொடங்கி வைக்கிறார்.

இதில் மாநிலங்களின் உயர்கல்வி மற்றும் தொழில்நுட்பக் கல்வித்துறை செயலாளர்கள் பங்கேற்க உள்ளனர்.

புதிய தேசிய கல்விக் கொள்கைக்கு ஏற்ப அணுகுமுறைகளை மேற்கொள்வது குறித்து இக்கூட்டத்தில் ஆலோசனை மேற்கொள்ளப்பட உள்ளதாக கல்வி அமைச்சகம் கூறியுள்ளது.

இரண்டு நாட்கள் நடைபெறும் இப்பயிலங்கில் பல்வேறு தலைப்புகளில் 14 அமர்வுகள் இடம்பெறும் என்று அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஐந்தாவது தேசிய ஏகலைவா மாதிரிப் பள்ளிகளுக்கான கலாச்சார மற்றும் இலக்கியத் திருவிழா புவனேஸ்வரில் இன்று தொடங்குகிறது.

இதனை மத்திய பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. ஜுயல் ஓரம் தொடங்கி வைக்க உள்ளார்.

வரும் 15ஆம் தேதி வரை மூன்று நாட்கள் நடைபெறும் இந்த விழாவை தேசிய பழங்குடியின் மாணவர்களுக்கான கல்விச் சங்கம் ஏற்பாடு செய்துள்ளது.

இதில் நாட்டின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஏகலைவா மாதிரி உறைவிடப் பள்ளிகளைச் சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்த உள்ளதாக பழங்குடியினர் நலத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

ஜவுளித்துறையில் இந்தியா பெரிய வளர்ச்சியை எட்டி வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. கிரிராஜ் சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் தேசிய ஆடை வடிவமைப்பு நிறுவனத்தின் பட்டமளிப்பு விழாவில் நேற்று அவர் பங்கேற்று 800க்கும் மேற்பட்ட மாணவ – மாணவிகளுக்கு பட்டங்களை வழங்கினார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், ஜவுளித்துறையில் வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருவதாகவும், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்குவதில் இத்துறை முக்கிய பங்காற்றுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இத்துறையில் நவீன தொழில்நுட்பங்களை மேலும் அதிக அளவில் பயன்படுத்த வேண்டும் என்றும் திரு. கிரிராஜ் சிங் வலியுறுத்தினார்.

<<<<>>>>

பொதுசேவை ஒலிபரப்பு தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

1947ஆம் ஆண்டு இதே நாளில் புதுதில்லி ஆகாஷ்வாணி நிலையத்திற்கு தேசத்தந்தை மகாத்மா காந்தி நேரில் சென்று உரையாற்றினார்.

குருஷேத்ரா முகாமில் இருந்த அகதிகளுக்காக அவர் ஆற்றிய அந்த உரையே வானொலியில் அவரது ஒரே நேரடி உரையாக அமைந்தது.

இந்த தினத்தை நினைவுகூறும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 12ஆம் தேதி பொது சேவை ஒலிபரப்பு தினமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

<<<<>>>>

கடல்சார் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து இந்திய - இலங்கை கடலோர காவல்படையினரின் 7வது ஆண்டுக் கூட்டம் கொழும்புவில் நேற்று நடைபெற்றது.

<<<<>>>>

ஜப்பான் மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

**Kuma Moto**-வில் நடைபெறும் இப்போட்டியில் இந்தியாவின் லக்ஷயாசென், பி.வி. சிந்து, காயத்திரி கோபிசந்த், திரிஷா ஜோலி உள்ளிட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்கின்றனர்.

--------------

தேசிய சீனியர் ஆடவர் ஹாக்கி சாம்பியன் போட்டியின் நேற்றைய ஆட்டங்களில் தாத்ராநகர் ஹவேலி, ஹரியானா, தெலங்கானா, கோவா, மணிப்பூர் அணிகள் வெற்றி பெற்றன.

சென்னையில் நடைபெற்று வரும் இப்போட்டியின் காலிறுதி ஆட்டங்கள் நாளை நடைபெற உள்ளன.

காலிறுதியில் தமிழ்நாடு அணி - உத்தரப்பிரதேசத்தை எதிர்கொள்ள உள்ளது.

இதேபோல் பஞ்சாப் - மணிப்பூரையும், ஹரியானா — மகாராஷ்டிராவையும், கர்நாடகா — ஒடிசாவையும் காலிறுதியில் எதிர்கொள்ள உள்ளன.

**<<<<The End>>>>**